**இன்றைய வேளாண் செய்திகள்**

**25.06.2013 A.M**

---

## பாபநாசம் அணை நீர்மட்டம் 102 அடியாக உயர்வு



திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை 102 அடியாக உயர்ந்தது.

84 அடி கொள்ளளவு கொண்ட கடனாநதி அணை நிரம்பிவிட்டது. அணைக்கு விநாடிக்கு 900 கனஅடி நீர்வரத்து இருந்தது.

மேற்குத் தொடர்ச்சி மலையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருவதையடுத்து, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக உள்ளது. திங்கள்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 4094.42 கனஅடி நீர்வரத்து இருந்தது. மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 5 அடி உயர்ந்து 102 அடியாக இருந்தது. அணையிலிருந்து 1150 கனஅடி தண்ணீர் பாசனத்துக்குத் திறந்துவிடப்படுகிறது.

சேர்வலாறு அணைக்கு விநாடிக்கு 2,000 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையின் நீர்மட்டம் 7 அடி உயர்ந்து 119.49 அடியாக இருந்தது. மணிமுத்தாறு அணைக்கு

விநாடிக்கு 362 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து 275 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

மாலை நிலவரப்படி கடனாநதி அணையின் நீர்மட்டம் 82 அடியை எட்டி நிரம்பியது. அணைக்கு விநாடிக்கு 900 கனஅடி நீர்வரத்து இருந்தது. ராமநதி அணை 2 தினங்களுக்கு முன்னரே நிரம்பியது குறிப்பிடத்தக்கது. இதனால் அணைக்கு வரும் உபரிநீர் ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது.

மழை அளவு: திங்கள்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 25 மி.மீ. மழையும், பாபநாசம் கீழ்அணையில் 3 மி.மீ. மழையும், சேர்வலாறு அணையில் 20 மி.மீ. மழையும், மணிமுத்தாறு அணையில் 2.2 மி.மீ. மழையும், ராமநதி அணையில் 6 மி.மீ. மழையும், அம்பாசமுத்திரத்தில் 4.2 மி.மீ. மழையும், சேரன்மகாதேவியில் 3 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

விவசாயிகள் வேண்டுகோள்: கடனாநதி, ராமநதி அணைகள் நிரம்பியுள்ளதால் இந்த இரு அணைகள் மூலம் பாசனம் பெறும் சுமார் 15,000 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று மாவட்ட விவசாயிகள் சங்கச் செயலர் ஆர்.கசமுத்து வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை: தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பில்லை

வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பில்லை என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடமேற்கு வங்கக் கடல் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. அது தற்போது ஒடிசா மற்றும் மேற்கு வங்கம் அருகே உள்ள கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளது.

குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை வலுவடைந்தாலும், அது வட மாநில கடலோரப் பகுதியில் நகர்ந்து செல்லவே அதிக வாய்ப்புள்ளதாகவும், அதன் மூலம் தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் தென் மேற்கு பருவ மழையின் உபரி மழை மேற்கு தொடர்ச்சி மலைக்கு அருகிலுள்ள தமிழகப் பகுதிகளில் பெய்து வருகிறது. வால்பாறை, சின்னக்கல்லாறு, நீலகிரி மாவட்டம் தேவாலா, கூடலூர் மற்றும் கன்னியாகுமரி, பாபநாசம், சங்கரன்கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர் உள்ளிட்ட இடங்களில் ஞாயிற்றுக்கிழமை மாலையிலிருந்து மழை பெய்து வருகிறது.

அதிகபட்சமாக வால்பாறை மற்றும் சின்னக்கல்லாறு பகுதிகளில் 70 மில்லி மீட்டர் மழை பதிவானது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுவையின் சில இடங்களில் செவ்வாய்க்கிழமை (ஜூன் 25) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும். பகல் வேளையில் தரைக் காற்று பலமாக வீச வாய்ப்புள்ளது.

## பாபநாசம் அணை நீர்மட்டம் உயர்வு

திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை 102 அடியாக உயர்ந்தது.

84 அடி கொள்ளளவு கொண்ட கடனாநதி அணை நிரம்பிவிட்டது. அணைக்கு விநாடிக்கு 900 கனஅடி நீர்வரத்து இருந்தது.

மேற்குத் தொடர்ச்சி மலையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருவதையடுத்து, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக உள்ளது. திங்கள்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 4094.42 கனஅடி நீர்வரத்து இருந்தது. மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 5 அடி உயர்ந்து 102 அடியாக இருந்தது. அணையிலிருந்து 1150 கனஅடி தண்ணீர் பாசனத்துக்குத் திறந்துவிடப்படுகிறது.

சேர்வலாறு அணைக்கு விநாடிக்கு 2,000 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையின் நீர்மட்டம் 7 அடி உயர்ந்து 119.49 அடியாக இருந்தது. மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 362 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து 275 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

மாலை நிலவரப்படி கடனாநதி அணையின் நீர்மட்டம் 82 அடியை எட்டி நிரம்பியது. அணைக்கு விநாடிக்கு 900 கனஅடி நீர்வரத்து இருந்தது. ராமநதி அணை 2 தினங்களுக்கு முன்னரே நிரம்பியது குறிப்பிடத்தக்கது. இதனால் அணைக்கு வரும் உபரிநீர் ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது. திங்கள்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 25 மி.மீ. மழையும், பாபநாசம் கீழ்அணையில் 3 மி.மீ. மழையும், சேர்வலாறு அணையில் 20 மி.மீ. மழையும், மணிமுத்தாறு அணையில் 2.2 மி.மீ. மழையும், ராமநதி அணையில் 6 மி.மீ. மழையும், அம்பாசமுத்திரத்தில் 4.2 மி.மீ. மழையும், சேரன்மகாதேவியில் 3 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

விவசாயிகள் வேண்டுகோள்: கடனாநதி, ராமநதி அணைகள் நிரம்பியுள்ளதால் இந்த இரு அணைகள் மூலம் பாசனம் பெறும் சுமார் 15,000 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று மாவட்ட விவசாயிகள் சங்கச் செயலர் ஆர்.கசமுத்து வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கரும்பு டன்னுக்கு ரூ. 3500 வழங்கக் கோரி முற்றுகை

கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3500 என விலை நிர்ணயம் செய்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் உள்ளிட்டக் கோரிக்கைளை வலியுறுத்தி தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் திங்கள்கிழமை தொடர் முற்றுகை போராட்டம் நடைபெற்றது.

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம அருகே திருமண்டங்குடியில் இயங்கி வரும் திருஆரூரான் சர்க்கரை ஆலை வளாகத்தில் நடைபெற்ற இந்த போராட்டத்துக்கு தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாநில குழு உறுப்பினர் பி.எம். காதர்உசேன் தலைமை வகித்தார். அதிமுக விவசாய பிரிவு மாவட்ட தலைவர் பி. அண்ணாமலை, கரும்பு விவசாயிகள் சங்க மாநில குழு உறுப்பினர் எஸ். தம்புசாமி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

இதில் சங்கத்தின் மாநில பொதுச் செயலர் டி. ரவீந்திரன், மாவட்டச் செயலர் சாமி.நடராஜன்,மாநில நிர்வாகக் குழு டி. காசிநாதன் உள்ளிட்ட 60-க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கபிஸ்தலம் காவல்துறையினர் கைது செய்தனர்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 15.65 அடியாக இருந்தது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 15.65 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 89 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 598 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## வேளாண் மாணவர்களுக்கு அதிகளவில் திட்டங்கள்

வேளாண் மாணவர்களுக்கு அரசுத் துறையில் அதிகளவில் திட்டங்கள் உள்ளன என்றார் திருச்சி நபார்டு உதவி பொது மேலாளர் சுரேஷ்குமார்.

கரூர் மாவட்டம், புழுதேரி சரஸ்வதி வேளாண் அறிவியல் மையத்தில் அண்மையில் நடைபெற்ற வேளாண் பயிற்சி நிறைவு விழாவில் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு முழுவதும் வேளாண் மற்றும் அதைச் சார்ந்த துறைகளில் தொழில் முனைவோரை உருவாக்க இந்திய வேளாண் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய வேளாண் விரிவாக்க அலுவலகம், கரூர் மாவட்டம் புழுதேரியில் உள்ள சரஸ்வதி அறக்கட்டளையைத் தேர்ந்தெடுத்துள்ளது.

இதன் கீழ் செயல்படும் வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் 5 மாவட்டங்களைச் சேர்ந்த 25 இளம் விவசாயிகளுக்கு இரு மாத இலவச வேளாண் மற்றும் அதைச் சார்ந்த துறைகளில் பயிற்சியளிக்கப்பட்டு, நிறைவு விழா புழுதேரியில் அண்மையில் நடைபெற்றது. மாவட்ட வேளாண் இணை இயக்குநர் தெய்வேந்திரன் சான்றிதழ்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் திருச்சி நபார்டு உதவி பொது மேலாளர் சுரேஷ்குமார் பேசியது:

வேளாண் படித்த இளைஞர்களுக்கு அரசுத் துறையில் அதிகளவில் திட்டங்கள் உள்ளன.

வங்கிகளில் மானியத்துடன் கூடிய கடனுதவி பெற்று நாற்றங்கால் உற்பத்தி, வேளாண் இடுபொருள் விற்பனை மற்றும் விவசாயிகளுக்கான ஆலோசனை மையங்களை அமைத்துப் பயன் பெறலாம் என்றார்.

கரூர் நபார்டு உதவிப் பொது மேலாளர் பார்த்திபன், மாவட்ட வங்கிகளில் வேளாண் தொழில் முனைவோருக்கு வழங்கப்படும் கடன் மற்றும் மானியங்கள் குறித்துப் பேசினார். கரூர் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் முருகேசன், சரஸ்வதி ஊரக மேம்பாடு மற்றும் பயிற்சி மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் திரவியம், மைய நிறுவன அறங்காவலர்கள் ராஜவேலு, லட்சுமணன் ஆகியோர் பேசினர். தோட்டக் கலைத் துறை தொழில்நுட்ப வல்லுநர் தனசேகர் வரவேற்றார். வேளாண் விரிவாக்க தொழில்நுட்ப வல்லுநர் தமிழ்ச்செல்வி நன்றி கூறினார்.

## கிருஷ்ணகிரி நீர்த் தேக்கங்களில் தண்ணீர் திறக்க கோரிக்கை

கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள நீர்த் தேக்கங்களில் முதல் போக சாகுபடிக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் திங்கள்கிழமை மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

இதுதொடர்பாக அந்தச் சங்கத்தின் மாநில பொதுச் செயலர் கே.எம்.ராமக்கவுண்டர் அளித்த மனு விவரம்:

கரநாடக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள கெலவரப்பள்ளி அணை, கிருஷ்ணகிரி அணை ஆகிய அணைகள் நிரம்பி வருகின்றன.

எனவே, பாசனத்திற்கு திறந்து விடுவதற்கு தேவையான தண்ணீர் அணைகளில் உள்ளது. மேலும், அணைகளில் உள்ள தண்ணீர் 100 நாள்களுக்கு பாசன வசதி பெறுமளவிற்கு போதுமானதாக உள்ளது. எனவே, கடந்த ஆண்டைப் போல தாமதிக்காமல், நிகழாண்டில்

முதல் போக சாகுபடிக்கு கிருஷ்ணகிரி அணை, பாரூர் ஏரி ஆகியவற்றிற்கு தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெள்ளைக் கொடி வெற்றிலை விலை சரிவு

பரமத்திவேலூர் வெற்றிலை ஏலச் சந்தையில் திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக் கொடி வெற்றிலையின் விலை சரிவடைந்ததால், விவசாயிகள் கவலையடைந்தனர்.

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டத்தில் பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், குப்புச்சிபாளையம், நன்செய் இடையாறு, பாலப்பட்டி, குன்னிபாளையம், எல்லைகாட்டுப்புதூர், மோகனூர் உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் கடும் வறட்சியின் காரணமாக வெற்றிலை உற்பத்தி குறைந்துள்ளது. இதற்கிடையே, தற்போது கர்நாடக மாநிலப் பகுதியில் இருந்து வெள்ளைக் கொடி வெற்றிலை வரத்து தமிழகத்திற்கு அதிக அளவில் உள்ளதால், வெள்ளைக் கொடி வெற்றிலை விலை சரிவடைந்தது. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக் கொடி வெற்றிலை 104 கவுளிகள் கொண்ட ஒரு சுமை ரூ. 6 ஆயிரத்திற்கும், கற்பூரி வெற்றிலை சுமை ஒன்று ரூ. 2 ஆயிரத்து 500-க்கும் ஏலம் போனது.

ஆனால், திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக் கொடி வெற்றிலை சுமை ஒன்று ரூ.4 ஆயிரத்து 500-க்கும், கற்பூரி வெற்றிலை சுமை ஒன்று ரூ.3 ஆயிரத்து 500-க்கும் ஏலம் போனது.

கர்நாடக மாநிலத்தில் இருந்து வெள்ளைக் கொடி வெற்றிலையின் வரத்து அதிகரித்துள்ளதால், அதன் விலையும் சரிவடைந்தது.

ஆனால், கற்பூரி வெற்றிலை சென்ற வாரத்தை விட கூடுதல் விலைக்கு ஏலம் போனதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## "வேலூர் மாவட்டத்தில் 20 லட்சம் பேர் ஆதார் அட்டைக்காகப் புகைப்படம் எடுப்பு'

வேலூர் மாவட்டத்தில் இதுவரை 20 லட்சம் பேர் ஆதார் அடையாள அட்டைக்காகப் புகைப்படம் எடுத்துள்ளனர் என்று ஆதார் அடையாள அட்டைக்கான மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சதீஷ் கூறினார்.

ஆதார் அடையாள அட்டைக்கான புகைப்படம் எடுத்தல் குறித்த ஆலோசனைக் கூட்டம் ராணிப்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் சதீஷ் பேசுகையில், மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டத்துக்கு நகர்மன்றத் தலைவர் சித்ரா சந்தோஷம் தலைமை தாங்கினார். நகர்மன்றத் துணைத் தலைவர் ஜே.பி.சேகர், ஆணையர் (பொறுப்பு) எஸ்.மணி, நகர்மன்ற உறுப்பினர் கே.பி.சந்தோஷம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## 28-இல் விவசாயிகள் முறையீட்டுக் கூட்டம்

கோவை மாவட்ட விவசாயிகள் முறையீட்டுக் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை (ஜூன் 28) நடைபெறுகிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள முதன்மைக் கூட்ட அரங்கில் காலை 10 மணிக்கு ஆட்சியர் தலைமையில் இக் கூட்டம் நடைபெற உள்ளது. இதில் விவசாயிகள் கலந்து கொண்டு வேளாண்மை தொடர்பான பிரச்னைகளுக்கு மனுக்கள் அளிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சின்கோனாவில் 73 மி.மீ. மழை

சின்கோனா பகுதியில் திங்கள்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 73 மி.மீ. மழை பெய்துள்ளது.

பிற இடங்களில் பெய்துள்ள மழை அளவு (மி.மீ.ல்): சோலையாறு 60, பரம்பிக்குளம் 44, ஆழியாறு 5.4, திருமூர்த்தி 1, அப்பர் நீராறு 66, லோயர் நீராறு 46, வால்பாறை 49, வேட்டைக்காரன்புதூர் 4.6, மாக்கினாம்பட்டி 9, மணக்கடவு 15, நல்லூர் 2, நவமலை 7, சர்க்கார்பதி 21, தூணக்கடவு 34, பெருவாரிப்பள்ளம் 36, அப்பர் ஆழியாறு 20, காடம்பாறை 6, பொள்ளாச்சி 10.

## விடுபட்ட விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்

விருதுநகரில் வறட்சி நிவாரண கணக்கெடுப்பில் விடுபட்டுப் போன விவசாயிகளுக்கும் நிவாரண உதவி வழங்க வலியுறுத்தி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விருதுநகர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடந்த இந்த ஆர்ப்பாட்டத்துக்கு வட்டாரத் தலைவர் ராமச்சந்திரன் தலைமை வகித்தார்.

வட்டாரச் செயலர் பாலுச்சாமி, நகரச் செயலர் காதர் மொய்தீன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

இதில், வறட்சி நிவாரணக் கணக்கெடுப்பில் பெயர் விடுபட்டுப் போன விவசாயிகளுக்கும் விரைவில் நிவாரண உதவித் தொகை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பழனிக்குமார் உள்ளிட்ட விருதுநகர் வட்டார பகுதி கிராமங்களைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் 122 பேருக்கு நலத் திட்ட உதவி

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில், உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 122 பேருக்கு அரசு சார்பில் பல்வேறு நலத் திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி வழங்கினார்.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உறுப்பினராக பதிவு செய்துள்ளவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, நலிந்தோர் உதவித் தொகை, இயற்கை மரண நிவாரண நிதி உள்பட மொத்தம் ரூ.4 லட்சத்து 63 ஆயிரத்து 500 மதிப்பிலான அரசு நலத் திட்ட உதவி வழங்கப்பட்டது. சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 21 பேருக்கு மாதாந்திர உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவு வழங்கப்பட்டது. பொது விநியோகத் துறை சார்பில் 31 பேருக்கு புதிய குடும்ப அட்டை வழங்கப்பட்டது.

மாவட்ட வழங்கல் அலுவலர் சரோஜா, சமூக பாதுகாப்புத் திட்ட தனித் துணை ஆட்சியர் அஜினாபாத்திமா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் ராஜராஜேஸ்வரி, மாவட்ட சமூக நல அலுவலர் யசோதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## உர விநியோகத்தை கண்காணிக்க குழு

உர விநியோகத்தை மாவட்ட மற்றும் வட்டார அளவில் கண்காணிக்கக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் எம்.ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

குறுவை சாகுபடிக்குத் தேவையான ரசாயன உரங்கள் விவசாயிகளுக்கு தடையில்லாமல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உர விநியோகத்தை மாவட்ட மற்றும் வட்டார அளவில் கண்காணிக்கக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

அனைத்து விவசாயிகளும் தங்களுக்குத் தேவையான ரசாயன உரங்களை அருகிலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் மற்றும் தனியார் உர நிறுவனங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

உர விநியோகம் மற்றும் உரம் கிடைப்பதில் ஏதேனும் இடர்பாடு இருந்தால், அதன் விவரத்தை மாவட்ட கண்காணிப்பு மையத்துக்கு 04142-290658 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்.

உர மூட்டை மீது அச்சடிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையைப் பார்த்து உரம் வாங்க வேண்டும்.

கூடுதல் விலைக்கு உரங்களை விற்பனை செய்யும் கடையின் உரிமம் ரத்து செய்யப்படும்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**25.06.2013 A.M**

---

## தமிழகம், கேரளாவில் முட்டை விலை 378 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 378 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை நுகர்வு, கணிசமான அளவில் உயர்ந்ததையடுத்து, விலை ஏற்றம் காணத் துவங்கியுள்ளதாக, பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 376 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, இரண்டு காசுகள் ஏற்றம் கண்டு, 378 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை நுகர்வு பரவலாக அதிகரித்துள்ளதால், அதன் விலை ஏற்றம் கண்டு வருகிறது என, பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:

சென்னை, 385, பெங்களூரு, 368, மைசூரு, 370, ஹைதராபாத், 340, மும்பை, 378, விஜயவாடா, 332, கோல்கத்தா, 365, பர்வாலா, 318, டில்லி, 336.

இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 61 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, கிலோ, 100 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## மார்க்கெட் கமிட்டியில்எள் வரத்து அதிகரிப்பு

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று எள் மூட்டைகளின் வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளது.கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று நீலமங்கலம்,

விளம்பாவூர், மைக்கேல்புரம், சங்கராபுரம், அருளம்பாடி, திருவண்ணாமலை, மூங்கில்துறைப்பட்டு உட்பட பல பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் எள் மற்றும் மக்காசோளம் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். 300 எள் மூட்டைகள், 300 மக்காசோளம் மூட்டைகள் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப் பட்டது.எள் அதிகபட்சம் ரூ.6,329க்கும், குறைந்தபட்சம் ரூ.5,580க்கும் விலை போனது. மக்காசோளம் அதிகபட்சம் ரூ.1,547க்கும், குறைந்தபட்சம் ரூ.14,74க்கும் விலை போனது. கடந்த ஒரு வாரத்தில் 1,314 எள் மூட்டைகள் 76 லட்சத்து 21 ஆயிரம் ரூபாய்க்கும், 1,780 மக்காசோளம் மூட்டைகள் 25 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.சின்னசேலம் மார்க்கெட் கமிட்டியில் நேற்று 110 மக்காசோளம் மூட்டைகள், 10 எள் மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

## மழையின்றி 45 ஆயிரம் ஏக்கர் நெல் சாகுபடி பாதிப்பு : நிவாரணம் வழங்க விவசாயிகள் எதிர்பார்ப்பு

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி பொதுப்பணித்துறை கோட்டத்தில் அணைகள், ஏரிகள் வறண்டதால் 45 ஆயிரம் ஏக்கர் நெல் சாகுபடி பாதித்தது. அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.கள்ளக்குறிச்சி பொதுப் பணித் துறை கோட்டத்தில் கோமுகி, மணிமுக்தா அணைகள், 205 ஏரிகள் மற்றும் கோமுகி, மணிமுக்தா, கெடிலம் ஆகிய மூன்று ஆறுகள் உள்ளது. 72 அணைகட்டுகள் உள்ளன. இரு அணைகள், ஏரி பாசனத்தை நம்பி 18 ஆயிரம் எக்டர் (45,000 ஏக்கர்) விளை நிலங்கள் உள்ளன.புறக்கணிப்புஅணை, ஏரி பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகள் நடுத்தர குடும்பத்தை சார்ந்தவர்கள். 46 அடி உயரமுள்ள கோமுகி அணையை இரு அடி உயர்த்தி கட்ட வேண்டும் என்றஅணை பாசன ஆயக்கட்டு தாரர்களின் கோரிக்கை 15 ஆண்டுகளாக புறக்கணிக்கப்படுகிறது.

ஒருபுறம் பருவமழை காணமால் போய் கடும் வறட்சியை சந்தித்து நெற்பயிர் கருகி அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் திண்டாடினர். மறுபுறம் இயற்கை

இடர்பாடுகளால் விவசாய நிலங்கள் பாதித்தாலும், பாதிப்பின் முழு சுமையை நடுத்தர விவசாயிகள் தாங்கிக் கொள்கின்றனர். பாதிப்பிற்கு அரசிடம் வைக்கும் நிவாரண கோரிக்கைகள் முழுமையாக கவனிக்கவில்லை.மழை ஏமாற்றம்கடந்தாண்டு பருவ மழை விவசாயிகளை ஏமாற்றியது. கள்ளக்குறிச்சி பகுதியில் மழை பெய்யக்கூடிய காலங்களில் கூட முழுமையான நெல் சாகுபடி என்பது ஆயக்கட்டு விவசாயிகளுக்கு அரிதான ஒன்றாக உள்ளது.அணை, ஏரி, ஆறு பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகள் ஓரளவு பெய்த மழையை நம்பி கடன்வாங்கி நெல் விதைத்தனர். ஆனால் விவசாயிகள் காத்திருந்தும் காலம் கடந்து கூட பருவ மழை பெய்யாததால் பாதித்தனர்.பயிரை அறுவடை செய்ய முடியாமல் தங்கள் கண்முன்னே தண்ணீரின்றி நெற்பயிர்கள் காய்ந்து கருகியது. ஒருபோகம் கூட முழுமையாக பயிர் செய்ய முடியவில்லை.நிவாரணம்

கடன் வாங்கியும் நகைகளை அடகு வைத்தும் நெற்பயிரிட்ட விவசாயிகளுக்கு கடன் சுமை அதிகரித்து வருகிறது. பாசனம் இல்லாமல் 45 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களில் நெல்சாகுபடி பாதித்தது. இதனால் விவசாய குடும்பத்தினர் தவித்து வருகின்றனர்.பாதித்த விவசாயிகள் டெல்டா மாவட்டங்களில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்குவது போல் அணை, ஏரி பாசனத்தை நம்பி ஏமாந்து பாதித்த விவசாயிகளுக்கும் அரசு நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர்.

### கதிர்விட்ட நேரத்தில் கருகும் நெற்பயிர்

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் அடுத்த முசரவாக்கம், விஷார் மற்றும் தாமல் ஆகிய கிராமங்களில் உள்ள விவசாயிகள், தங்களது நிலத்தில்,

50 அடி ஆழம் கொண்ட விவசாயக் கிணற்றில், 400 - 500 அடி வரை ஆழ்துளை கிணறுகள் அமைத்து, பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வந்தனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு, சொர்ணவாரி பட்டத்தில், குறுவை பயிர்களான, ஏடிடி.,43, ஏடிடி.,45 ஆகிய ரக

நெல் பயிர்களை, இப்பகுதி விவசாயிகள் சாகுபடி செய்தனர்.

இவை, 90 - 100 நாட்களுக்குள் அறுவடைக்கு தயாராகிவிடும். இப்பயிர்கள், நடவு செய்த 60 - 70வது நாட்களுக்குள் கோடைக் காலம் முடிந்துவிடும். அதன்பின், ஒரு மழை

பெய்தால், பயிர்கள் ஊட்டமாக இருப்பதுடன், ஒரு சில நாட்களில் கதிர் விடும். ஆனால், இவ்வாண்டு மழையும் பெய்யவில்லை. கிணறுகளும் முற்றிலும் வறண்டுவிட்டன.

இதுகுறித்து, முசரவாக்கத்தைச் சேர்ந்த விவசாயி வெங்கடேசன் கூறியதாவது:

விவசாயம் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில், பாசனக் கிணற்றில், ஒரு லட்சம் ரூபாய் செலவில், 500 அடி ஆழத்தில், ஆழ்துளை கிணறு அமைத்து, பயிர் செய்தோம்.

கதிர்விடும் நேரத்தில், நிலத்தடிநீர் முற்றிலும் வறண்டுள்ளதால், பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் கருகி வருகின்றன. இதனால், அவை மாடுகளுக்கு தான் தீவனமாகின்றன. இவ்வாறு வெங்கடேசன் கூறினார்.

## சொட்டுநீர் பாசனத்தில் சுரைக்காய் சாகுபடி சாதிக்கும் கீழ்மருவத்தூர் விவசாயி

கீழ்மருவத்தூர்:சொட்டு நீர் பாசன முறையில், சுரைக்காய் பயிரிடுவதன் மூலம், 25 சென்ட் நிலத்தில், 90 நாட்களில், 40 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது என, சித்தாமூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கிழ்மருவத்தூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி மதனா தெரிவித்தார்.

மானியம்

இதுகுறித்து, அவர் கூறியதாவது:

எனக்கு சொந்தமாக, 3.50 ஏக்கர் நிலம் உள்ளது. ஆண்டுதோறும் ஒரு போகம் நெல் சாகுபடி செய்து வருகிறேன்.

தற்போது, போதிய நீர் இன்றி, எந்த பயிர்களையும் சாகுபடி செய்யாமல் இருந்தேன்.

இந்நிலையில், தோட்டக்கலை துறையினர் வழிகாட்டுதலின் படி, சொட்டு நீர் பாசன முறையில், 25 சென்ட் நிலத்தில் சுரைக்காய் சாகுபடி செய்துள்ளேன்.

இதற்கு தேவையான, சொட்டு நீர் பாசன கருவிகளை பொருத்த அரசு சார்பில், 75 சதவீத மானியம்

வழங்கியது.

நடவு

நிலத்தை நன்கு உழுது,

பதப்படுத்தி, 5 - 5 அடியில்,

மேட்டுப்பாத்தி அமைத்து, ஒன்றரை அடி இடைவெளியில் விதைகளை நடவேண்டும்.

இதற்கு, அடிஉரமாக ‹ப்பர் பாஸ்பேட் 2 மூட்டையும், இயற்கை உரமும் இடவேண்டும்.

7வது நாளில், செடி முளைக்கும். 15வது நாளில், சொட்டுநீர் பாசன குழாய் மூலம்,

தண்ணீரில் மருந்தை கலந்து,

செடிகளுக்கு இட வேண்டும்.

இரண்டு முறை களை எடுக்க வேண்டும். 50வது நாளில், காய் காய்க்க துவங்கும். மூன்று

நாட்களுக்கு ஒரு முறை, காய்களை அறுவடை செய்ய வேண்டும்.

லாபம்

இதனை, கோயம்பேடு மற்றும் மேல்மருவத்தூர் ஆகிய பகுதி

களில், விற்பனை செய்து வருகிறோம். தற்போது, ஒரு கிலோ

8 ரூபாய்க்கு விலை போகிறது. 25 சென்ட் நிலத்தில், 5 டன்

காய்கள் கிடைக்கும்.

இதற்கு, அனைத்து செலவுகளும் சேர்ந்து, 3,000 ரூபாய் செலவு ஆகிறது. இதன் மூலம், 90

நாளில், 40 ஆயிரம் ரூபாய் வரை லாபம் ஈட்டலாம். கிராமங்களில் இருந்தும் வந்து,

வாங்கிச் செல்கின்றனர்.

இவ்வாறு, அவர் கூறினார்.

## கரும்பு சோகைக்கு கிராக்கி காத்திருக்கும் விவசாயிகள்

க.பரமத்தி: பருவமழை தவறியதால் கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாடு

ஏற்பட்டுள்ளதால், கரும்பு சோகைக்கு திடீர் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் நிலக்கடலை, சோளம், நெல்,

கேழ்வரகு, எள் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்து, அறுவடை முடிந்த பிறகு செடி,

கொடிகளை கால்நடை தீவனத்துக்காக விவசாயிகள் சேமித்து வைப்பது வழக்கம்.

ஆனால், கடந்தாண்டு பருவமழை தவறியதாலும், நிலத்தடி நீர் குறைந்து விட்டதாலும்,

எதிர்பார்த்த அளவில் சாகுபடி பணிகள் நடக்கவில்லை.

இதனால் கடந்த, ஆறு மாதங்களாக கால்நடை தீவனத்துக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. போதிய தீவனம் இல்லாததால், மாடு, ஆடு உள்ளிட்ட கால்நடைகள் இறைச்சிக்காக விற்பனை செய்யும் அவல நிலை தொடர்ந்து வருகிறது.

கரூர் மாவட்டத்தில் கடந்தாண்டு எதிர்பார்த்த அளவில் மழை பெய்யவில்லை. இதனால் கால்நடைகளுக்கு தேவையான தீவனம் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

சொட்டு நீர் பாசனம் மூலம் சாகுபடி செய்யப்பட்ட கரும்பு சோகைகள், கால்நடைகளுக்கு உணவாக அளிக்கப்பட்டு வருகிறது. ஒரு காலத்தில் கரும்பு சோகைகளை விவசாயிகள் தூக்கி எறிவது வழக்கம். ஆனால், தற்போது தீவனத்துக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், ஒரு கட்டு கரும்பு சோகை, 50 ரூபாய் முதல், 100 வரை, விற்பனை செய்யப்படுகிறது.

ஆனால், கரும்பு சோகையும் குறைவாக கிடைப்பதால், கால்நடைகளைக் காப்பாற்ற, கரும்பு பயிரிட்டுள்ள தோட்டங்களுக்கு மற்ற விவசாயிகள் நேரிடையாகச் சென்று, கரும்பு சோகைகளை அதிக விலை கொடுத்து வாங்கி வருகின்றனர்.

மேலும், கரூர் மாவட்டத்தில் வாரந்தோறும் நடக்கும் கிராமச்சந்தைகளில், விலை கொடுத்து வாங்க கரும்பு சோகைகளை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

## பெரியாறு நீர்மட்டம் உயர்வு

கூடலூர்:பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில், தொடர்ந்து பெய்து வரும் மழையால், அணையின் நீர்மட்டம், உயர்ந்து வருகிறது.

நேற்று காலை நீர்மட்டம், 119.20 அடியாக இருந்தது. நீர்வரத்து 2282 கன அடி.

தமிழகப்பகுதிக்கு

நீர் திறப்பு 604 கன அடி. அணையில் நீர் இருப்பு 2484 மில்லியன் கன அடி.

வைகை அணை நீர்மட்டம் 33.70 அடியாக இருந்தது. நீர்வரத்து 235 கன அடி. நீர் திறப்பு 50 கன அடியாக இருந்தது. நீர் இருப்பு 520 மில்லியன் கன அடியாகும்.

மழையளவு (மி.மீ.,):

பெரியாறு 24.8, தேக்கடி

28.6, கூடலூர் 14, உத்தம

பாளையம் 1, சண்முகாநதி 2, வைகை அணை 1.

தேனி:வீரப்பஅய்யனார் கோயில் பாதையில் உள்ள மக்காச்சோள தோட்டங்களில் காட்டுப்பன்றிகள் புகுந்து பயிர்களை நாசம் செய்கின்றன. தேனி அல்லிநகரத்தில் இருந்து, வீரப்ப அய்யனார் கோயில் செல்லும் ரோட்டின் இருபுறமும் தோட்டங்களில் கரும்பு, வாழை, காலிபிளவர், மக்காச்சோளம், தக்காளி, தென்னை, மா சாகுபடி நடந்து வருகிறது. தற்போது மா சீசன் என்பதால், விவசாயிகள் தோட்டங்களில் தங்கியிருந்து இரவு காவல் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள், மின்விளக்குகளை ஒளிரவைத்தும், பாதுகாப்பிற்காக புகை போட்டும், இசைஒலி எழுப்பியும், சத்தம் வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வனவிலங்குகளை துரத்தி வருகின்றனர். இருப்பினும், வனவிலங்குகள் தோட்டங்களுக்குள் புகுந்து சேதப்படுத்துகின்றன.

நேற்று முன்தினம், காட்டுப்பன்றிகள் ஊர் பகுதியை ஒட்டியுள்ள ஜனார்த்தனம் என்பவரது தோட்டத்திற்குள் புகுந்து, ஒரு ஏக்கர் மக்காச்சோளத்தை சேதப்படுத்தின. அருகில் உள்ள நடராஜன் தோட்டத்திலும் மக்காச்சோளத்தை நாசம் செய்தன. ஏற்கனவே, விலை குறைவால் சிரமப்படும் விவசாயிகள், காட்டு விலங்குகள் பயிர்களை நாசம் செய்வதால் கவலை அடைந்துள்ளனர்.காட்டுப்பன்றிகளை கட்டுப்படுத்த, வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## நத்தத்தில் மா விளைச்சல், விற்பனை ஆரம்பத்தில் குறைவு, அடுத்தது அதிகம்

நத்தம்:நத்தத்தில் இந்தாண்டு மா விளைச்சல், விற்பனை ஆரம்பத்தில் குறைவாகவும், இம்மாதம் அதிகமாகவும் இருந்தது.

நத்தம்,சாணார்பட்டி ஒன்றியங்களில் ஆண்டுதோறும் மார்ச் முதல் ஜூலை வரை மா சீசன் நடப்பது வழக்கம். இந்தாண்டு சீசனில் இரு பிரிவு கட்டங்களாக மரங்களில் மகசூல் கிடைத்தது.

சீசன் துவக்க மாதமான பிப்ரவரி முதல் மார்ச் வரை மா விளைச்சலுக்கேற்ற மழையின்றி 40 சதம் பூக்கள் மட்டுமே வைத்து பிஞ்சுகள் காணப்பட்டன. இதனால் மாம்பிஞ்சுகள் உதிர்ந்து குறைந்தே மகசூலானது.

இச்சமயம் மரங்களில் பறிக்கப்பட்ட ஜாதிவகை, நாட்டுவகை மாங்காய்கள் சிறுத்து சூம்பியும் காணப்பட்டன. இதனால் மகசூல் குறைந்தும் கூட மார்க்கெட்களில் குறைந்த விலைக்கே விற்கப்பட்டன.

நல்ல விலை: 2ம் கட்டமாக ஓரளவு பெய்த சாரல் மழையால் மீண்டும் மரங்களில் பூக்கள் பூத்து பிஞ்சுகள் காணப்பட்டன. இவைகள் நன்கு பருத்தும் எடை அதிகரித்து காணப்பட்டன. இதனால், மார்க்கெட்களில் நல்ல விலைக்கு விற்கப்பட்டன. இந்தாண்டு மா சீசன் வரும் ஜூலை முதல் வாரத்தில் நிறைவடைகிறது.

தற்சமயம் கல்லாமை, காசா ஆகிய ரகங்கள் மட்டுமே மார்கெட்டிற்கு வருகின்றன. இவைகளில் கல்லாமை அதிகளவு இப்பகுதி மாம்பழச்சாறு ஆலைகளால் கிலோ ரூபாய் 10 முதல் 12 வரை கொள்முதல் செய்யப்படு கின் றன. காசா கிலோ 15 முதல் 13 வரை வெளிமாநிலங்கள், வெளியூர்களுக்கு அனுப்பப்படுகின்றன.

வேம்பார்பட்டி மா கமிஷன் கடை

உரிமையாளர் ஹரிஹரன் கூறுகையில்,

"" நத்தம், சாணார்பட்டி பகுதிகளில் மா சீசன் 2 கட்டங்களாக மகசூலானது.

ஆரம்பத்தில் மரங்களில் 40 சதம்வரை மரங்களில் இருந்த,பூ பிஞ்சுகள் மழையின்றி உதிர்ந்து,காய்கள் சூம்பியதால் விலை குறைந்தன. பின்னர் பெய்த ஓரளவு மழையால் 2ம் கட்டமாக மரங்களில் காணப்பட்ட பூ, பிஞ்சுகள் நன்கு பருத்து எடை வந்தது. இவைகள் நல்ல விலைக்கு விற்றன,"இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**25.06.2013 A.M**

---

## கர்நாடகாவில் விளைச்சல் அதிகரிப்பு சின்னவெங்காயம் விலை குறைகிறது



சேலம் : கர்நாடகாவில் பெய்த மழையால் சின்னவெங்காயம் நல்ல விளைச்சலை தந்துள்ளது. அதனால் மார்க்கெட்டில் சின்னவெங்காயம் விலை படிப்படியாக குறைந்து, தற்போது கிலோ ரூ.55 முதல் 60 என விற்பனையாகிறது. கடந்தாண்டு கர்நாடகா, ஆந்திரா, தமிழகத்தில் போதிய மழை இல்லாததால், சின்னவெங்காய விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால் மற்ற காய்கறிகளை விட, சின்னவெங்காயத்தின் விலை உயர்ந்தது.

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன், கர்நாடகாவில் பெய்த மழையால் அங்கு சின்னவெங்காயம் நல்ல விளைச்சலை தந்துள்ளது. அங்கிருந்து சேலம் மார்க் கெட்டுகளுக்கு சின்னவெங்காயம் வரத்து அதிகரித்துள்ளதால், விலை படிப்படியாக குறைந்து வருகிறது. இதுகுறித்து செவ்வாய்பேட்டை பால்மார்க்கெட் வெங்காய வியாபாரிகள் கூறியதாவது: கடந்த மே மாதம் முதல் மழையின்றி விவசாயம் பாதிக்கப்பட்டதால்,

சேலம் மார்க்கெட்டிற்கு சின்னவெங்காயம் வரத்து மிகவும் குறைந்தது. தற்போது,

கர்நாடகாவில் பெய்த மழையால் சின்னவெங்காயம் நல்ல விளைச்சலை தந்துள்ளது. அங்கிருந்து டன் கணக்கில் சேலம் மார்க்கெட்டுக்கு சின்னவெங்காயம் வருகிறது. கடந்த இரு வாரங்களுக்கு முன் வெளிமார்க்கெட்டில் ரூ.80க்கு விற்ற முதல் ரக சின்னவெங்காயம் தற்போது ரூ.55 முதல் ரூ.60 ஆகவும், உழவர்சந்தைகளில் ரூ.55 ஆகவும் விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது.
இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## நீர் மட்டம் 120 அடியை எட்டியும் பெரியாறு அணை தண்ணீரை வைகைக்கு கூடுதலாக திறப்பதில் சிக்கல்



மதுரை : பெரியாறு அணை நீர்மட்டம் 120 அடியை எட்டியும், வைகை அணைக்கு திறந்துவிடப்படும் அளவை அதிகரிக்காததால் சிக்கல் நிலவுகிறது.
முல்லை பெரியாறு அணை இருபோக சாகுபடி 60 ஆயிரம் ஏக்கர் உள்ளது. இதில் 15 ஆயிரம் ஏக்கருக்கு (கம்பம் பள்ளத்தாக்கு பகுதி) பெரியாறு அணையில் இருந்து நேரடியாக தண்ணீர் திறக்கப்படும். பேரணை முதல் கள்ளந்திரி மதகு வரையிலான 45 ஆயிரம் ஏக்கருக்கு வைகை அணையில் இருந்து திறக்கப்படும்.

இதற்காக பெரியாறு அணை நீர் மட்டம் 114 அடியை தாண்டியதும் மழை நீடித்தால், அதற்கு மேல் கூடுதலாக ஏறும் தண்ணீரை அதிகாரிகள் வைகை அணைக்கு திறந்து விடுவர். ஏனெனில் பெரியாறு அணையில் நீர்வரத்து அதிகரித்தால், மொத்தமாக வெளியேற்றி வைகைக்கு கொண்டு வர இயலாது. இதன் காரணமாக, தண்ணீர் பெருகும்போது அதனை படிப்படியாக வைகையணைக்கு கொண்டு வந்து சேர்க்க

வேண்டும் என்பது விதிமுறையாகும். இரு அணையிலும் சேர்த்து மொத்தம் 4 ஆயிரத்து 300 மில்லியன் கன அடி பெருகினால் 60 ஆயிரம் ஏக்கர் பாசனத்துக்கும் தண்ணீர் திறக்கப்படும். குறைவாக இருந்தால் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிக்கு மட்டும் பயன்பெறும்.

பெரியாறு அணை 114 அடியை தாண்டியதும் 15 ஆயிரம் ஏக்கர் பாசனத்துக்கு திறக்குமாறு கம்பம் பள்ளதாக்கு விவசாயிகள் கோரினர். மழை நீடித்து நீர் மட்டம் ஏறியதால், 60 ஆயிரம் ஏக்கர் பாசனம் முழுமைக்கும் தண்ணீர் கிடைக்கும் வகையில், பெரியாறு அணையில் இருந்து தண்ணீரை வைகை அணைக்கு திறக்க வேண்டும் என 45 ஆயிரம் ஏக்கர் பாசன விவசாயிகளும் வலியுறுத்தினர்.

இந்த நிலையில் 15 ஆயிரம் ஏக்கர் பாசனத்துக்கும் திறக்கவில்லை. பெரியாறு அணை 120 அடியை எட்டி உள்ளது. காலையில் வினாடிக்கு 2 ஆயிரத்து 282 கன அடி நீர் வந்தது. மாலையில் 3 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. கூடுதலாக வரும் தண்ணீரை வைகைக்கு திறக்காமல், நேற்று மாலை முதல் 1,200 கன அடி மட்டுமே திறக்கப்படுகிறது. வைகை அணைக்கு நேற்று காலை 235 கன அடி நீர் மட்டுமே வந்தது. மாலையில் சிறிது அதிகரித்தது. இதனால் வைகையில் 33.50 அடி நீர் மட்டுமே உள்ளது. கூடுதலாக தண்ணீர் திறந்தால் தான் வைகையில் நிரம்ப வாய்ப்பு ஏற்படும்.

அரசியல் தலையீடுகள் குறுக்கிடுவதால், பொதுப்பணித்துறை பொறியாளர்கள் விதிமுறைகளை கடைபிடிக்க முடியாமல் குளறுபடியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். கடந்த 2012 நவம்பரில் 45 ஆயிரம் ஏக்கருக்கு போதுமான தண்ணீரை அரசியல் குறுக்கீட்டால் விதியை மீறி ஒன்றரை லட்சம் ஏக்கருக்கு திறந்து யாருக்கும் பயன்படாமல் வீணானது. எனவே இப்போது அதிகாரிகள் பெரிதும் தயக்கம் காட்டுகின்றனர்.

பொதுப்பணித்துறை பொறியாளர் ஒருவர் கூறுகையில், “பெரியாறு அணை நீர் தற்போது இரு அணைகளிலும் மொத்தம் 3 ஆயிரம் மில்லியன் கன அடி உள்ளது. பெரியாறில் கூடுதலாக வைகைக்கு தண்ணீரை கொண்டு வர பரிசீலிக்கப்படுகிறது. தற்போது மழை

நீடிப்பதால் முதல் போகம் முழுவதும் பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்க வாய்ப்புள்ளது" என்றார்.

மழை நீடிப்பு

முல்லை பெரியாறு அணை பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று காலை வரை பெய்த மழை மி.மீ. அளவில் வருமாறு:, பெரியாறு, 25, தேக்கடி, 29, கூடலூர், 14, சண்முகாநதி , 3, உத்தமபாளையம்,2 மழை பெய்துள்ளது. நேற்று மாலை பலத்த மழை பெய்தது.

## வெல்லம் தரம் குறைந்ததால் மண்டிகளில் விலை சரிவு

பிலிக்கல்பாளையம் மண்டிகளில் வியாபாரிகள் வரத்து குறைந்துள்ள நிலையில், வெல்லம் விலை சரிந்துள்ளது.

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுக்காவில் உள்ள சோளசிராமணி, மரப்பாளையம் சிறுநல்லிக்கோயில், ஜேடர்பாளையம், கபிலர்மலை, அண்ணாநகர், ஆனங்கூர், பெரியமருதூர், பிலிக்கல்பாளையம், பொன்மலர்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் கரும்பு பயிரிட்டுள்ளனர். இப்பகுதிகளில் விளையும் கரும்புகளை விவசாயிகள் மோகனூரில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைக்கு பதிவு செய்து வெட்டுகின்றனர்.

பதிவு செய்யாத விவசாயிகள் வெல்லம் தயாரிக்கும் ஆலைகளுக்கு விற்பனை செய்கின்றனர். வாங்கிய கரும்புகளை இயந்திரங்களில் இட்டு பிழிகின்றனர். அதில் கிடைக்கும் சாற்றினை கொப்பரையில் கொட்டி காய்ச்சுகின்றனர். பின்னர், பாகு பதத்திற்கு வந்ததும் அதனை அச்சு வெல்லம், உருண்டை வெல்லமாக தயார் செய்து அருகாமையில் உள்ள பிலிக்கல்பாளையத்தில் செயல்பட்டு வரும் மண்டிகளுக்கு கொண்டு வருகின்றனர்.

அங்கு ஏலத்தின் மூலம் வெல்லம் விற்பனை செய்யப்படுகிறது. ஏலம் எடுப்பதற்கு தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் வருகின்றனர்.

இங்கிருந்து தமிழகத்தின் பல்வேறு பகதிகளுக்கும், கேரளா, ஆந்திரா, கர்நாடகா, உத்திரபிரதேசம், உத்ராஞ்சல், சண்டிகர் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் வெல்லம் அனுப்பி வைக்கப்படுகிறது.

கடந்த வாரம் 30 கிலோ எடை கொண்ட ஒரு சிப்பம் உருண்டை வெல்லம்

1400க்குவிற்பனை செய்யப்பட்டது. அச்சு வெல்லம் ஒரு சிப்பம்

1500க்குவிற்பனையானது. கரும்பு டன்

3ஆயிரத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டது. இந்த வாரம் வெல்லம் விலை சரிந்துள்ளது. அச்சுவெல்லம் சிப்பம்

1200ஆகவும், உருண்டை வெல்லம்1100ஆகவும் விலை குறைந்தது. கரும்பு டன்

2ஆயிரம் முதல்2500வரை விற்பனை செய்யப்பட்டது. இதனால், கரும்பு விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

வியாபாரிகள் வரத்து குறைந்துள்ளதால், விலை சரிந்துள்ளதாக மண்டி அதிபர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து கரும்பு விவசாயியும், வெல்ல மண்டி சங்க தலைவருமான ரவிச்சந்திரன் கூறியதாவது:

போதிய மழை இல்லாததே இதற்கு காரணம். 7 நாட்களுக்கு ஒருமுறை கரும்புக்கு தண்ணீர் பாய்ச்சி வந்த நிலையில், கடும் தட்டுப்பாடு காரணமாக தற்போது 15 நாட்களுக்கு ஒருமுறை தான் தண்ணீர் பாய்ச்சும் நிலை காணப்படுகிறது. இதனால், குறிப்பிட்ட தினங்களுக்கு முன்னதாகவே கரும்புகளை அறுவடை செய்வதால், அதில் எதிர்பார்த்த அளவிற்கு பிழி திறன் கிடைப்பதில்லை.

ஒரு டன் கரும்பில் இருந்து 120 கிலோ வெல்லம் தயாரிக்க முடியும். தற்போது, 90 கிலோ தான் கிடைக்கிறது. அதுவும் தரமானதாக இருப்பதில்லை என கூறி வியாபாரிகள் வாங்குவதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர். இதுவும் வெல்லம் விலை சரிவுக்கு காரணம். ஏற்கனவே விலை உயர்வை காரணம் காட்டி தமிழக மக்கள் வெல்லத்தின் பயன்பாட்டை குறைத்துக்கொண்ட நிலையில், தரத்தை காரணம் காட்டி வெளி மாநிலங்களிலும் புறக்கணித்து வருவதால் வியாபாரிகள் வரத்து குறைந்துள்ளது. இதனால், விலை குறைந்துள்ளது. எனவே, தமிழக அரசு கவனத்தில் கொண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கரும்பு விவசாயிகளுக்கு உரிய நிவாரண வழங்க நடவடிக்கை எடுக்க

வேண்டும்.

இவ்வாறு ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

## திண்டலில் மஞ்சள் இருப்பு வைக்க ரூ.46.75 லட்சம் செலவில் குடோன்

ஈரோடு, : ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு சொந்தமான மஞ்சள் இருப்பு குடோன் மற்றும் மஞ்சள் அறவை மில் கருங்கல்பாளையத்தில் இயங்கி வருகிறது. இந்த மஞ்சள் கிடங்குகளில் 2500 டன் எடையுள்ள மஞ்சள் இருப்பு வைக்க முடியும். இங்கு இருப்பு வைக்கப்படும் மஞ்சளுக்கு முதல் 6 மாதங்களுக்கு கிடங்கு வசதி, மருந்து அடித்தல், காப்பீடு ஆகியவை இலவசமாக வழங்கப்படுகிறது. தற்போது இந்த குடோன்களில் மஞ்சள் மூட்டைகள் நிரம்பி வழிவதால் கூடுதலாக கிடங்கு வசதிகளை ஏற்படுத்த முடிவு செய்து அதற்காக ஈரோடு திண்டல் பகுதியில் சங்கத்திற்கு சொந்தமான காலியிடத்தில் தமிழக அரசின் நபார்டு நிறுவனத்தின் ஊரக கட்டமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து தலா ரூ.46.75 லட்சம் செலவில் 2 குடோன்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. குடோன்கள் கட்டி முடிக்கப்பட்டால் ஒவ்வொரு குடோனிலும் 1000 டன் எடையுள்ள மஞ்சள் இருப்பு வைக்க முடியும். புதிதாக கட்டப்படவுள்ள இரண்டு மஞ்சள் குடோன்களின் கால்கோள் விழா நேற்று நடந்தது. மாவட்ட கலெக்டர் சண்முகம் தலைமையில் பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம் குடோன் அமைப்பதற்கான கால்கோள் விழாவில் பங்கேற்று பணியைத் துவக்கி வைத்தார். விழாவில் இணைப்பதிவாளர் பிரபு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பேரிக்காய் விளைச்சல் அமோகம்

குன்னூர், : நீலகிரி மாவட்டத்தில் தேயிலை, காய்கறி பயிர்களுக்கு அடுத்து பழ வகைகள் அதிகளவில் பயிரிடப்படுகிறது. பலா, மாதுளை, பிளம்ஸ், பீச், பேரிக்காய் உள்ளிட்ட பழ வகை விவசாயம் குறிப்பிடத்தக்க அளவு உள்ளது. அந்தந்த சீசன்களில் இந்த பழங்கள் விற்பனை அமோகமாக இருக்கும்.

குன்னூர் சுற்றுவட்டார பகுதியில் சுமார் முன்பு சுமார் 500 ஏக்கரில் விவசாயிகள்

தனியாகவும், தேயிலைக்கு ஊடுபயிராகவும் பேரிக்காய் பயிரிட்டிருந்தனர். கரடி, குரங்கு, யானை உள்ளிட்ட விலங்குகளின் தொந்தரவால் படிப்படியாக பேரிக்காய் விவசாயத்தை குறைத்தனர். விவசாய நிலங்கள் கர்டடேஜ்களாக மாறிவிட்டதும் ஒரு காரணம்.
உலிக்கல், ரன்னிமேடு, மரப்பாலம் உள்ளிட்ட இடங்களில் தற்போது பேரிக்காய் மரங்களே இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது.
இருப்பினும், சில விவசாயிகள் தொடர்ந்து பேரிக்காய் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். குன்னூர் பகுதியில் 200 ஏக்கரில் பேரிக்காய் மரங்கள் உள்ளன. வால் பேரி, குண்டு பேரி, சாம்பல் பேரி, சட்டி பேரி என பல்« வறு வகையான பேரிக்காய்க ள் பயிரிடப்படுகின்றன.
ஜூன் முதல் ஆகஸ்ட் வரை பேரிக்காய் சீசன் காலமாகும். இதனால் விளைச்சல் அதிகரித்து விற்பனைக்கு வந்துள்ளன. கேரளா உள்ளிட்ட வெளிமாநில வர்த்தகர்கள் பேரிக்காய்களை வாங்கி, தரம் பிரித்து லாரிகளில் ஏற்றி கொண்டு செல்கின்றனர்.
ஒரு கிலோ பேரிக்காய் கிலோ ரூ.40க்கு விற்கின்றனர். மார்க்கெட்டில் வியாபாரிகள் கிலோ ரூ.60 முதல் ரூ.80 வரை விற்கின்றனர். கேரளாவில் இதை ஊட்டி ஆப்பிள் என கூறுகின்றனர். அங்கு அதிகளவில் செல்கிறது. சில மது வகை களில் பயன்படுத்தப்படுவதால், மது உற்பத்தி ஆலைகளுக்கும் பேரிக்காய்களை மொத்தமாக கொள்முதல் செய்கின்றனர்.

## பரிசோதனைக்கு மண்மாதிரி எடுப்பது எப்படி?

மண் பரிசோதனைக்கு மண் மாதிரி எடுப்பது குறித்து வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
இதுகுறித்து வேளாண் அதிகாரிகள் கூறியதாவது:
மண் மாதிரி ஆய்வுக்கு அரை கிலோ மண் கொடுத்தால் போதும். அந்த அரை கிலோ மண் குறிப்பிட்ட நிலத்திற்கு சரியான மாதிரியாக இருந்தால்தான் நிலத்தின் உண்மையான வளம் தெரியும். ஒவ்வொரு முறையும் பயிர் செய்வதற்கு முன்பு மண் பரிசோதனை செய்ய வேண்டும். ஒரு பயிர் அறுவடை செய்த பின்பும், அறுவடைக்கு பின் நிலத்தை தயார் செய்வதற்கு முன்பும் உள்ள இடைப்பட்ட காலத்தில்தான் மண் மாதிரி எடுக்க வேண்டும். ஒரு நிலத்தின் மண் வெவ்வேறாக இருந்தால் தனித்தனியாக மாதிரி எடுக்க வேண்டும்.

எரு குவித்த இடம், வரப்பு வாய்க்கால் அருகில் மற்றும் மர நிழலில் மாதிரி எடுக்கக்கூடாது. ஒவ்வொரு வயலுக்கும் தனித்தனியே மாதிரி எடுக்க வேண்டும். மண்மாதிரி எடுக்கப்படும் இடத்திலுள்ள இலை, சருகு, புல், ஆகியவைகளை செதுக்காமல் அப்புறப்படுத்த வேண்டும். நெல், கேழ்வரகு போன்ற தானிய பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகளுக்கு அரை அடி ஆழத்திலும், கரும்பு, பருத்தி, வாழை, காய்கறி செடிகளுக்கு முக்கால் அடி ஆழத்திலும், தென்னைக்கு 3 அடியும், மா, சப்போட்டா போன்ற பழ மரங்களுக்கு 6 அடி ஆழத்திலும் குழி வெட்டி அடுக்கு வாரியாக, தனித்தனியாக மண் மாதிரி எடுக்க வேண்டும்.

கால பயிர்களுக்கு �வி' வடிவில் குழி வெட்ட வேண்டும். வெட்டிய குழியின் இரு ஓரங்களிலும் மண்வெட்டியின் தகட்டால் மேலிருந்து கீழ் வரை 1 செ.மீ. கனத்திற்கு சீராக மண்ணை சுரண்டி எடுத்து சேகரிக்க வேண்டும். இதுபோல் 1 ஏக்கருக்கு 10 முதல் 15 இடங்களில் மண் சேகரித்து அதை சுத்தமான பிளாஸ்டிக் பை அல்லது சாக்கில் கொட்டி நன்றாக கலந்து கல், கண்ணாடி, வேர் தண்டுகளை அப்புறப்படுத்த வேண்டும். பின்பு, நான்கு சம போக முறையில் அரைக்கிலோ மண்ணை எடுத்து துணிப்பையில் போட்டுக் கட்ட வேண்டும்.

மண் மாதிரியுடன் விவசாயி பெயர் மற்றும் அஞ்சல் முகவரி, கிராமத்தின் பெயர், நிலத்தின் பெயர், இறவையா அல்லது மானாவாரியா, பயிரிடப்பட்ட பயிர், அடுத்து பயிரிட போகும் பயிர், பிரச்னை இருப்பின் அதன் விபரங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும். இவ்வாறு வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வாழைத்தார் விலை உயர்வு

பரமத்தி வேலூர், :

பரமத்தி வேலூர் மண்டிகளில் வாழைத்தார் விலை உயர்ந்துள்ளது.

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர், மோகனூர், பாண்டமங்கலம், ஜேடர்பாளையம் உள்ளிட்ட காவிரி ஆற்று படுகையில் வாழை சாகுபடி பிரதானமாக உள்ளது. வாழை தோட்டங்களில் ஆண்டு முழுவதும் தண்ணீர் தேங்கியிருக்க வேண்டும். ஆனால், உரிய காலத்தில் மழை பெய்யாததாலும், காவிரியில் தண்ணீர் வரத்து இல்லாததாலும் வாழை

விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

சாகுபடி பரப்பு மற்றும் மகசூல் பாதியாக குறைந்து விட்ட நிலையில் பரமத்தி வேலூரில் உள்ள மண்டிகளுக்கும் வாழைத்தார் வரத்து சரிந்துள்ளது. தினமும் சராசரியாக 1000 வாழைத்தார்கள் வந்து கொண்டிருந்த நிலையில், தற்போது வெறும் 400 தார்கள் மட்டுமே வருவதாக மண்டி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முன்பெல்லாம் மண்டி முழுவதும் ஏலத்திற்காக வாழைத்தார்கள் பரப்பி வைக்கப்பட்டிருக்கும். தமிழகம் மட்டுமின்றி வெளி மாநில வியாபாரிகளும் வந்து லாரி லாரியாக வாழைத்தார்களை வாங்கிச் செல்வது வழக்கம். தற்போது, வரத்து குறைந்துள்ளதால் மண்டிகள் வெறிச்சோடி கிடக்கிறது.

இதனால், வாழைத்தார் விலையும் உயர்ந்துள்ளது. கடந்த வாரம்

350க்கு விற்பனை செய்யப்பட்ட பூவன்தார் நேற்று

400ஆக விலை உயர்ந்தது. இதேபோல், ரஸ்தாளி

300ல்இருந்து

350ஆகவும், கற்பூரவள்ளி

300ல்இருந்து

400ஆகவும், பச்சை நாடன்

400ல்இருந்து

500ஆகவும், மொந்தன் காய்

400ல் இருந்து

500

ஆகவும் அதிகரித்தது. இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், “வரத்து சரிந்துள்ளதாலும், திருமணம் உள்ளிட்ட சீசன் காலம் என்பதாலும் வாழைத்தார் விலை உயர்ந்துள்ளது. இந்த விலைக்கு வாங்கிச்சென்று சில்லரையில் எப்படி விற்பனை செய்வது என்றே தெரியவில்லை,” என்றனர்.

1000 வந்த இடத்தில் 400 ஆக சரிந்தது

## போதிய மழையின்மையால் வெண்டைக்காய் விளைச்சல் சரிவு

இடைப்பாடி, :

இடைப்பாடி, கொங்கணாபுரம், பக்கநாடு, ஆடையூர், இருப்பாளி, தாதாபுரம், பூலாம்பட்டி, கூடக்கல், நெடுங்குளம், காட்டூர், கல்வடங்கம், கோனேரிப்பட்டி, செட்டிப்பட்டி, தேவூர் ஆகிய பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் வெண்டைக்காய் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஒரு மாதமாக அறுவடை பணி தீவிரமாக நடந்து வருகிறது.

இடைப்பாடியில் கொங்கணாபுரம் மூலப்பாதை, கல்வடங்கம் மூலப்பாதை உள்ளிட்ட இடங்களில் வியாபாரிகள் கிலோ

15 என வெண்டைக்காய்களை விவசாயிகளிடம் இருந்து மொத்தமாக வாங்கிக்கொள்கின்றனர். இங்கிருந்து தினமும் கோவை வழியாக கேரளாவுக்கு 30 டன் வெண்டைக்காய் அனுப்பி வைக்கப்படுகிறது.

போதிய மழையின்மை காரணமாக வெண்டைக்காய் விளைச்சல் வழக்கத்தை விட குறைந்து விட்டது. இதனால் வெண்டை பயிரிட்ட விவசாயிகளுக்கு நஷ்டமேற்பட்டுள்ளது. இதுபற்றி விவசாயி நடேசன் கூறியது: வெண்டை சாகுபடிக்கு ஒரு ஏக்கருக்கு ஒன்றரை கிலோ விதை தேவைப்படுகிறது. இதற்கு 3 ஆயிரம் செலவாகும். இதுதவிர மருந்து தெளித்தல், அறுவடை கூலிக்கு

7 ஆயிரம் ஆகும். மொத்தம் 10 ஆயிரம் தேவைப்படும்.

ஏக்கருக்கு சராசரியாக 500 கிலோ வரை வெண்டைக்காய்கள் கிடைக்கும். இதில் பிஞ்சாக இருக்கும் காய்கள் கிலோ

15 வரை விற்பனையாகும். சொத்தை மற்றும் முற்றிய காய்கள் அதிகபட்சமாக

9 முதல் 10 வரை வியாபாரிகள் எடுத்துக் கொள்வார்கள். நடப்பாண்டில் போதிய மழை பெய்யாததால், குறைந்த அளவிலேயே வெண்டைக்காய்கள் விளைந்துள்ளன. இதனால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றார்.

இதே போல பூலாம்பட்டி விவசாயி சதீஷ் கூறும்போது, அரை ஏக்கரில் வெண்டைக்காய் பயிரிட்டேன். ஆனால் 100 கிலோ அளவுக்கு மட்டுமே வெண்டைக்காய்கள் கிடைத்தது. விலையும் மிக குறைவாக கிடைப்பதால், எனக்கு நஷ்டமேற்பட்டுள்ளது என்று கூறினார்.

## வறட்சி நிவாரணம் வழங்குவதில் முறைகேடு விவசாயிகள் கலெக்டரிடம் புகார்

தூத்துக்குடி, : சங்கம்பட்டி கிராமத்தில் வறட்சி நிவாரண தொகை வழங்குவதில் முறைகேடு நடப்பதாக கூறி கலெக்டர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.

ஓட்டப்பிடாரம் தாலுகா சங்கம்பட்டி கிராம மக்கள் நேற்று கலெக் டர் அலுவலகத்தை முற்றுகையிட்டு மனு கொடுத்தனர். மனுவில் கூறியிருப்பதாவது: எங்கள் கிராமத்தில் தமிழக அரசு சார்பில் வறட்சி நிவாரண தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதில் பல்வேறு விவசாயிகளுக்கு முழுமையான நிவாரணம் வழங்கப்படவில்லை. விவசாயம் செய்த நிலங்களுக்கு சரியான கணக்கு எடுக்கப்படவில்லை. 2 ஏக்கர் முதல் 10 ஏக்கர் வரை விவசாயம் செய்த நிலம் கணக்கில் வரவில்லை. ஆனால் அதே நேரத்தில் ஒரே நபருக்கு ரூ.5 லட்சம் வரை நிவாரண தொகை வழங்குவதற்கு கணக்கு எடுக்கப்பட்டுள்ளது. சங்கம்பட்டி கிராம மக்கள் அனைவரும் கம்பெனி நிலங்களை தனித்தனியாக விவசாயம் செய்து வருகின்றனர். அந்த நிலத்தையும் ஒரே குடும்பத்தினர் பெயரில் வறட்சி நிவாரணம் பெற கிராம நிர்வாக அதிகாரி ஏற்பாடு செய்துள்ளார். எனவே வறட்சி நிவாரணம் வழங்குவதில் பல்வேறு முறைகேடு நடந்துள்ளது. இதுகுறித்து விசாரணை நடத்தி பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். முறை கேடாக கணக்கு எடுப்பு செய்த கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு ஊர்வலம் மாணவ, மாணவிகள் பங்கேற்பு

வேலூர் மாவட்டத்தில்

ஆம்பூர், :

வேலூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது.

ஆம்பூர் இந்து மேனிலைப்பள்ளியில் இருந்து நகராட்சி தலைவர் சங்கீதா பாலசுப்பிரமணி கொடியசைத்து ஊர்வலத்தை துவக்கி வைத்தார். ஆணை யாளர் (பொறுப்பு) குமார் முன்னிலை வகித்தார். முக்கிய வீதிகள் வழியாக வந்த ஊர்வலம் நகராட்சி அலுவலகத்தில்

முடிவடைந்தது.

இதில், ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை சங்க தலைவர் மதியழகன், வேலூர் மேற்கு மாவட்ட ஜெ. பேரவை செயலாளர் பாலசுப்பிரமணி, கவுன்சிலர்கள் சீனிவாசன், சரவணன், பிலால் அஹ்மத், ஆகில் அஹ்மத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பேரணாம்பட்டு:

பேரணாம்பட்டு நகராட்சி சார்பில் நடந்த மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு ஊர்வலத்தை நகராட்சி தலைவர் காத்தவராயன் தொடங்கி வைத்தார். துணைத்தலைவர் ஆலியார்ஜுபேர் அஹமத் முன்னிலை வகித்தார். பொறியாளர் ஜெயகுமார் வரவேற்றார். இதில், கவுன்சிலர்கள், வருவாய் ஆய்வாளர் இன்பசேகரன், துப்புரவு ஆய்வாளர்கள் சந்திரசேகரன், ஆதிகேசவலு உட்பட பலர் கலந்துகொண்டனர்.

ஆற்காடு:

ஆற்காடு நகராட்சி அலுவலகம் அருகில் இருந்து புறப்பட்ட மழைநீர் விழிப்புணர்வு ஊர்வலத்தை நகராட்சி தலைவர் ஆர்.புருஷோத்தமன் கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில், துணை தலைவர் எஸ்.கீதாசுந்தர், ஆணையா ளர் செ.பாரிஜாதம், பொறி யாளர் கார்த்திகேயன், சமுதாய அமைப்பாளர் ம.துரை, கவுன்சிலர்கள் கோபி, செந்தில்குமார், பார்த்தசாரதி, பாலாஜி, மல்லிகா, லதா சோமசேகரன் மற்றும் ஜி.வி.சி. பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டனர். முடிவில் சுகாதார ஆய்வாளர் முருகன் நன்றி கூறினார்.

வாலாஜா:

வாலாஜா நகராட்சி சார்பில் நடந்த விழிப்புணர்வு ஊர்வலத்தை மகாத்மா காந்தி பூங்கா அருகே நகராட்சி தலைவர் வேதகிரி துவக்கி வைத்தார். துணைத்தலைவர் மூர்த்தி, ஆணையாளர் சங்கர் முன்னிலை வகித்தனர்.

பின்னர், அரசு பெண்கள் பள்ளியில் நடந்த கூட்டத்தில் ஒன்றியக்குழு தலைவர் நிர்மலா, மாவட்ட கவுன்சிலர் சுமைதாங்கி ஏழுமலை, வாலாஜா நகர செயலாளர் மோகன், வேளாண் கூட்டுறவு சங்க தலைவர் நாரயணன், பள்ளி தலைமையாசிரியர் மணிவண்ணன் மற்றும் கவுன்சிலர்கள் முரளி, அபிபுல்லா, ராணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கரும்பு டன் ஒன்றுக்கு 3500 வழங்க வேண்டும்

உளுந்தூர்பேட்டை, :

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் ஒன்றிய பணிக்குழு கூட்டம் உளுந்தூர்பேட்டையில் நடந்தது. ஒன்றிய தலைவர் கொடியான் தலைமை தாங்கினார். ஒன்றிய பொருளாளர் வெங்கடேசன் வரவேற்றார். மாவட்ட தலைவர் ஸ்டாலின்மணி, செயலாளர் சுப்பிரமணியன், ஒன்றிய செயலாளர் சீனுவாசன் ஆகியோர் துவக்க உரையாற்றினார்கள். அகில இந்திய மாவட்ட பணிக்குழு தலைவர் ராமமூர்த்தி எம்எல்ஏ கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3500 வழங்க வேண்டும். வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகமே ஏற்றுக்கொள்ள வேண்டும். நெல் குவிண்டாலுக்கு ரூ .2500 வழங்க வேண்டும். உரம், பூச்சிமருந்து, விதைகள் ஆகியவற்றின் விலையை குறைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

உளுந்தூர்பேட்டையில் நடந்த தமிழ்நாடு விவசாயிகள் சங்க கூட்டத்தில் ராமமூர்த்தி எம்எல்ஏ கலந்து கொண்டார்.

அகில இந்திய மாவட்ட பணிக்குழு தலைவர் ராமமூர்த்தி எம்எல்ஏ கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3500 வழங்க வேண்டும். வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகமே ஏற்றுக்கொள்ள வேண்டும். நெல் குவிண்டாலுக்கு ரூ .2500 வழங்க வேண்டும். உரம், பூச்சிமருந்து, விதைகள் ஆகியவற்றின் விலையை குறைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இதில் ஒன்றிய செயலாளர்கள் ஆறுமுகம், குடியரசுமணி, அய்யம்பெருமாள், தங்கராசு உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**25.06.2013 A.M**

## பரமத்தி வேலூரில், வரத்து அதிகரிப்பால் வெள்ளைக்கொடி வெற்றிலை விலை குறைந்தது

பரமத்தி வேலூர்

பரமத்தி வேலூரில், வரத்து அதிகரித்ததால் வெள்ளைக்கொடி வெற்றிலையின் விலை சுமை ஒன்றுக்கு ரூ.1,500 வரை குறைந்து உள்ளது.

**வெற்றிலை பயிரீடு**

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா காவிரி கரையோர பகுதிகளில் உள்ள பொத்தனூர், வேலூர், பாண்டமங்கலம், அணிச்சம் பாளையம், நன்செய் இடையாறு, பொய்யேரி, பாலப்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டு உள்ளது.

இங்கு விளையும் வெற் றிலைகள் சேலம், மதுரை, கோவை, ஊட்டி, திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட் டங்களுக்கும், கேரளா, கர் நாடகா, ஆந்திரா, மகாராஷ் டிரா, குஜராத் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் லாரிகள் மற்றும் ரெயில்கள் மூலமாக அனுப்பப்பட்டு வருகிறது.

**விலை குறைந்தது**

இந்த நிலையில் பரமத்தி வேலூரில் சென்ற வாரம் நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை மார் 104 கவளிகள் கொண்ட சுமை ஒன்று ரூ.6 ஆயிரத்துக்கு ஏலம் போனது. இதேபோல கற்பூரி வெற்றிலை சுமை ஒன்று ரூ.2 ஆயிரத்து 500க்கு ஏலம் போனது.

இந்த நிலையில் நேற்று நடை பெற்ற ஏலத்தில் வெள்ளைக் கொடி வெற்றிலை மார் 104 கவளிகள் கொண்ட சுமை ஒன்று ரூ.4 ஆயிரத்து 500க்கு ஏலம் போனது. இதேபோல கற்பூரி வெற்றிலை சுமை ஒன்று ரூ.3 ஆயிரத்து 500க்கு ஏலம் போனது.

இதில் வெள்ளைக்கொடி வெற்றிலை சுமை ஒன்றுக்கு ரூ.1,500 வரை குறைந்து உள்ளது. இதேபோல கற்பூரி வெற்றிலை சுமை ஒன்றுக்கு ரூ.1,000 வரை உயர்ந்து உள் ளது.

**வரத்து அதிகம்**

கர்நாடகா, மைசூர் உள் ளிட்ட பகுதிகளில் போதிய தண்ணீர் உள்ளதால் அந்த பகுதிகளில் இருந்து வெள்ளைக்கொடி வெற்றிலை யின் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் வெள்ளைக் கொடி வெற்றிலையின் விலை குறைந்து உள்ளது. ஆனால் கர்நாடக பகுதிகளில் கற்பூரி வெற்றிலை பயிரிடப்பட வில்லை. இதனால் கற்பூரி வெற்றிலையின் விலை உயர்ந்து உள்ளதாகவும் வியா பாரிகள் தெரிவித்தனர்.

## விளைச்சல் அதிகரிப்பால் சின்ன வெங்காயம் கிலோ ரூ. 60–க்கு விற்பனை மழை பெய்வதால் விலை மேலும் குறைய வாய்ப்பு

சேலம்,

விளைச்சல் அதிகரிப்பால் சின்னவெங்காயம் கிலோ ரூ.60–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தமிழகம் மற்றும் கர்நாடகாவில் மழை பெய்து வருவதால் விலை மேலும் குறைய வாய்ப்பு இருக்கிறது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

சின்னவெங்காயம்

கர்நாடகா மாநிலம் மைசூர், கொள்ளேகால் உள்ளிட்ட பகுதியிலும், சேலம் மாவட்டத்தில் பனமரத்துப்பட்டி, மேச்சேரி, தலைவாசல், மல்லூர், ஓமலூர், வாழப்பாடி, ஜலகண்டாபுரம் உள்ளிட்ட பகுதியிலும், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும் சின்னவெங்காயம் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

சேலம் மார்க்கெட்டுக்கு கர்நாடகா மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து டன் கணக்கில் சின்னவெங்காயம் விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது. கடந்தாண்டு

போதிய மழை இல்லாததால் சின்னவெங்காயம் விளைச்சல் வெகுவாக குறைந்தது. இதனால் சேலம் மார்க்கெட்டிற்கு சின்ன வெங்காயத்தின் வரத்து குறைந்ததால் ஒரு கிலோ ரூ.90 வரைக்கும், உழவர் சந்தையில் ரூ. 80 வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது.

<u>விலை குறைந்தது</u>

இந்தநிலையில், கர்நாடகாவில் பெய்துவரும் மழையால் தற்போது சின்னவெங்காயம் விளைச்சல் அதிகரித்து காணப்படுகிறது. இதனால் அங்கிருந்து டன் கணக்கில் சின்னவெங்காயம் சேலம் மார்க்கெட்டிற்கு வந்து கொண்டிருக்கிறது. கடந்த 2 வாரங்களுக்கு முன்பு வெளிமார்க்கெட்டில் ஒரு கிலோ ரூ.80–க்கு விற்பனை செய்யப்பட்ட முதல் ரக சின்னவெங்காயம் தற்போது ரூ.60–க்கும், உழவர் சந்தையில் ரூ. 55–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. கர்நாடகாவிலும், தமிழகத்திலும் தற்போது மழை பெய்து வருவதால் சின்னவெங்காயத்தின் விலை மேலும் குறையவாய்ப்பு இருக்கிறது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

## அமராவதி அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு

மடத்துக்குளம்

அமராவதி அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு பாசன பகுதிக்கு நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது.

<u>பழைய ஆயக்கட்டு பாசனம்</u>

உடுமலை அருகேயுள்ள அமராவதி அணை மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளில் சுமார் 55 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. மேலும் முக்கிய குடிநீர் ஆதாரமாகவும் உள்ளது. அமராவதி அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 90 அடியாகும். அணையின் மொத்த கொள்ளளவு 4 ஆயிரத்து 47 மில்லியன் கன அடியாகும்.

அமராவதி அணைக்கு கேரளாவில் இருந்து பாம்பாறு, சின்னாறு மற்றும் தேனாறு மூலம் தண்ணீர் வருகிறது. இந்த நிலையில் அமராவதி அணையில் இருந்து கடந்த 16–ந் தேதி

குடிநீர் தேவைக்காக கரூர் வரை தண்ணீர் திறக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அமராவதி பழைய ஆயக்கட்டு பகுதிக்கும் தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று விவசாயிகள் பொதுப்பணி துறையினருக்கு கோரிக்கை விடுத்தனர்.

<u>தண்ணீர் திறப்பு</u>

இந்தநிலையில் அமராவதி அணையில் இருந்து நேற்று முதல் ஆற்றின் வழியாக பழைய ஆயக்கட்டு பாசன பகுதிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன் மூலம் குமரலிங்கம், சோழமாதேவி, கணியூர், கண்ணாடிபுத்தூர், கடத்தூர், காரத்தொழுவு பகுதிகளான 6 பழைய ஆயக்கட்டு பகுதிகளில் உள்ள சுமார் 4 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட விளைநிலங்கள் பாசன வசதி பெறும். தொடர்ந்து 5 நாட்களுக்கு இந்த தண்ணீர் திறக்கப்பட உள்ளது.

நேற்றைய நிலவரப்படி அமராவதி அணையின் நீர் மட்டம் 35.92 அடியாகவும், கொள்ளளவு 586.45 மில்லியன் கன அடியாகவும், தண்ணீர் வரத்து 2,670 கன அடியாகவும், வெளியேற்றம் 1,000 கன அடியாகவும் இருந்தது. பழைய ஆயக்கட்டு பகுதிக்கு அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் அந்த பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## வறட்சி நிவாரணம் வழங்க கோரி கலெக்டரிடம் விவசாயிகள் மனு

கரூர், ஜூன்

வறட்சி நிவாரணம் வழங்க கோரி வெள் ளியணை பகுதி விவசாயிகள் கலெக்டர் ஜெயந்தியிடம் மனு கொடுத்து உள்ளனர்.

**விவசாயிகள்**

கரூரை அடுத்த வெள்ளியணை பகுதியை சேர்ந்த விவசாயிகள் சுமார் 100க்கும் மேற்பட்டவர்கள் நேற்று கலெக்டர் ஜெயந்தி யிடம் ஒரு மனு கொடுத்து உள்ளனர். அந்த மனுவில் அவர்கள் கூறியிருப்ப தாவது: வெள்ளியணை பகுதியில் ஏராளமான ஏக்கரில் வாழை, தென்னை உள்பட பல்வேறு பயிர்கள் விவசாயம் செய்து இருந்தோம். மழை

பொய்த்து விட்டதால் தண்ணீர் இன்றி அனைத்து விவசாய பயிர்களும் காய்ந்து போய் விட்டது.

**கடன் சுமையில் உள்ளோம்**

இதனால் நாங்கள் மிகவும் சிரமப்பட்டு வருகிறோம். மேலும் கடன் சுமையில் உள்ளோம். இந்த நிலையில் காய்ந்து போன விவசாய பயிர்களுக்கு அரசு நிவாரணம் வழங்கி வருகிறது. ஆனால் எங்களுக்கு எந்த நிவாரண தொகையும் வழங்கவில்லை. எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் வறட்சி நிவாரணம் உடனே வழங்க வேண்டும்.இவ்வாறு அந்த மனுவில் அவர்கள் கூறி உள்ளனர். மனுவை பெற்றுக் கொண்ட கலெக்டர் இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**100 நாள் வேலை பயனாளிகள் மனு**

கரூர் மாவட்டத்திற்கு உட்பட்ட மேலப்பாளையம், பஞ்சப்பட்டி, புங்கம்பாடி ஆகிய ஊராட்சியை சேர்ந்த பொது மக்கள் ஏராளமான வர்கள் நேற்று கலெக்டர் ஜெயந்தியிடம் ஒரு மனு கொடுத்தனர். அந்த மனுவில் அவர்கள் கூறி இருப்பதாவது: மேற்கண்ட 3 ஊராட்சி பகுதியை சேர்ந்த நாங்கள் சுமார் 500க்கும் மேற்பட்ட வர்கள் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் பணியாற்றி வருகிறோம். இதில் வாய்க்கால் தூர் வாருதல் உள்பட பல்வேறு வேலைகள் செய்து வருகிறோம்.

**கோரிக்கை வைத்தோம்**

ஆனால் எங்களுக்கு அரசு நிர்ணயித்த அளவு கூலி வழங்குவதில்லை. மிகவும் குறைந்த அளவு அதாவது ஒரு நாளைக்கு ரூ.40, ரூ.50 வழங்குகிறார்கள். இது குறித்து சம்பந்தப்பட்டவர்களிடம் பல முறை கோரிக்கை வைத்தோம். ஆனால் நடவடிக்கை இல்லை. எனவே எங்களுக்கு சரியான அளவு கூலி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் அவர்கள் கூறி உள்ளனர். மனுவை பெற்றுக் கொண்ட கலெக்டர் மனு மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.